செய்தி வெளியீடு எண்.712 நாள்.14.10.2009

# தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக தேசிய அளவில் 5 விருதுகள்!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்!

இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னை அரசு பொது மருத்துவமனையில் மாற்று இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு குணமடைந்துள்ள 20 வயதுடைய செல்வி அபிநயா, தமது பெற்றோர் மற்றும் தமக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்த சென்னை அரசுப் பொது மருத்துவமனையின் இருதய சிகிச்சைத் துறை நிபுணர் டாக்டர் எஸ். விஸ்வகுமார் மற்றும் அரசு பொது மருத்துவமனை குழுவினர் ஆகியோருடன் முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து தமது மகிழ்ச்சியையும், மனமார்ந்த நன்றியையும் தெரிவித்தார்.

மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அளவில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் என்ற அடிப்படையில் சுகாதாரத் துறையில் தமிழக அரசு செய்து வரும் பல்வேறு சீர்திருத்தங்களுக்காகவும் உன்னதமான பல புதிய திட்டங்களை நிறைவேற்றி வருவதற்காகவும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அரசு கூட்டு முயற்சியில் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காகவும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு **இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2009 – ஆம் ஆண்டிற்கான மூன்று விருதுகள்** கிடைத்துள்ளன.

அதாவது, தமிழகத்தில் "கேட்டலிஸ்ட் டிரஸ்ட்" என்ற தனியார் நிறுவனம், தமிழக அரசுடன் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக **காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள "மேடவாக்கம்" ஆரம்ப சுகாதார நிலையத்தை 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தி தரமான மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றது.** இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் மருத்துவர் பணியிடங்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தனியார் மற்றும் அரசு கூட்டு முயற்சித் திட்டத்தில் மேம்படுத்தப்பட்ட மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பல்வேறு மாநிலங்களிலிருந்து உயர்மட்டக் குழுக்கள் வந்து பார்வையிட்டுப் பாராட்டிச் செல்வதுடன் அந்தந்த மாநிலங்களில் இதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்திடவும் தொடங்கியுள்ளனர். தரம் உயர்த்தப்பட்ட பின்னர் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை மூன்று மடங்காகவும், புற நோயாளிகளின் எண்ணிக்கை ஐந்து மடங்காகவும், இங்கு நடைபெறும் பிரசவங்களின்

எண்ணிக்கை பல மடங்காகவும் உயர்ந்துள்ளது. சுத்தமான சுற்றுப்புறச் சூழல், தூய்மையான படுக்கை விரிப்புகளுடன், நவீன வசதிகளுடன்கூடிய பிரசவ அறை, அறுவை சிகிச்சை அரங்கு போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டு இங்குத் தனியார் மருத்துமனைக்கு நிகராக தரமான மருத்துவ சேவைகள் அளிக்கப்படுகின்றன.

விருதுக்குரியவர்களைத் தேர்வு செய்வதற்காக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு. ஆர்.சி. லக்கோட்டி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன்பு 7.9.2009 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற நேர்காணல் நிகழ்ச்சியில், தமிழக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் உரிய விளக்கப் படங்களுடன், தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டப் பணிகளை விளக்கியதன் அடிப்படையில் தேர்வுக்குழு தமிழகத்தை முதன்மை விருதுக்குத் தேர்ந்தெடுத்தது. இதற்கான விருது வழங்கும் விழா டெல்லி **லீ மெரிடியன் ஓட்டலில் 15.9.2009** அன்று நடைபெற்றது. இவ்விழாவில் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் இளங்கோ, இந்தியாவின் பழம்பெரும் நடிகையும் பொதுநல ஆர்வலருமான **திருமதி. ஷப்னா ஆஸ்மி அவர்களிடம் சான்றிதழையும், மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. தினேஷ் திரிவேதி அவர்களிடம் பரிசுக் கேடயத்தையும் பெற்றார்.**

அதேபோல ஸ்டான்லி மருத்துவமனையின் இரப்பை குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறைக்கு “மனிதவள மேம்பாடு நிர்வாகத்திற்கான” விருதும்,

எச்.ஐ.வி / எய்ட்ஸ் திட்டத்தைச் செயல்படுத்தும் “தாய்” என்ற அமைப்பிற்கு அரவாணிகள் சமூக மேம்பாட்டுப் பணிகளுக்குரிய விருதும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

இவ்விருதுகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நாளான 15.9.2009 அன்று தமிழகத்திற்கு கிடைத்திருப்பது பெரிதும் மகிழ்ச்சி அளிக்கிறது. அகில இந்திய அளவில் இந்த உயரிய விருதினைத் தமிழகம் பெற்றதன் வாயிலாக, மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அளிக்கும் சுகாதார நலப்பணிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் கிராம மக்களுக்குத் தரமாக கிடைக்கின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டு, தமிழகத்தின் பெருமை மற்ற மாநிலங்களிடையே உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவைமட்டுமல்லாமல் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் நடைமுறைப்படுத்தி வரும் இணையவழி மருத்துவமனை மேலாண்மைத் திட்டத்திற்காகவும், அரசின் பல்வேறு முன்னோடித் திட்டங்களுக்காகவும் அகில இந்திய அளவில் “இ – இந்தியா 2009” என்ற விருது ஐதராபாத் நகரில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

மேலும், புதுடெல்லியில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வதில் தேசிய அளவில் தமிழகம் இரண்டாம் இடம் பெற்றுள்ளது என்பதற்கான விருதும் வழங்கப்பட்டது.

**இந்த ஐந்து விருதுகளையும் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், காண்பித்தார்.**

**அவற்றைப் பார்வையிட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தேசிய அளவில் விருதுகள் பெறுவதற்குக் காரணமான உழைத்துள்ள அனைத்து அதிகாரிகளுக்கும், மருத்துவத் துறை சார்ந்த வல்லுநர்களுக்கும் தமது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்.**

**இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் திட்ட அலுவலர் டாக்டர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் இளங்கோ, 'தாய்' அமைப்பின் இயக்குநர் டாக்டர் ஆர். இலட்சுமிபாய், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் சுரேந்திரன், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் விநாயகம் ஆகியோர் உடனிருந்தனர்.**

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9